# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் வாஹித்
## பள்ளிவாயிலில் 24.02.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸூர் அவர்கள் சூரா அல் ஜின்னு –ன் 19 வது வசனத்தையும், சூரா அல் அஃராஃப் –ன் 30 வது வசனத்தையும் ஓதினார்கள்:**

*பொருள்: நிச்சயமாக மஸ்ஜிதுகள் அல்லாஹ்விற்கு உரியவையே. அதில் அல்லாஹ்வுடன் வேறெதனையும் அழைக்காதீர்கள். (72:19)*

*நீர் கூறுவீராக: எனது இறைவன் நீதியுடன் நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான். மேலும் ஒவ்வொரு பள்ளிவாசல்களிலும் உங்கள் கவனத்தை அல்லாஹ்வின் பக்கமே வையுங்கள். மார்க்கத்தை அவனுக்காக கலப்பற்றதாக்கி அவனையே அழையுங்கள். உங்களை முதன் முறையாக படைத்தது போன்றே மரணத்திற்குப் பிறகு நீங்கள் அவனிடமே திரும்புவீர்கள். (7:30)*

அல்ஹம்துலில்லாஹ். இன்று இப்பகுதியில் ஒரு பள்ளிவாசலைக் கட்டி அதன் திறப்பு விழாவையும் நடத்த நமக்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. இப்பகுதி ஃபெல்தம் (Feltham) என்று அழைக்கப்படுகிறது. இப்பகுதி ஹௌன்ஸ்லோ என்ற பகுதிக்கு அருகில் உள்ளது. எனவே இரு ஜமாஅத்துகள் சேர்ந்து இந்தப் பள்ளிவாசலைக் கட்டியுள்ளன. அதுமட்டுமின்றி மண்டல அமீர் சாஹிபின் கணிப்பிற்கேற்ப ஒருவேளை இப்பள்ளிவாசல் இப்பகுதியின் பெரிய பள்ளிவாசலாக இருக்கலாம். எனது கருத்தின்படி இப்பகுதியில் இதைவிட பெரிய பள்ளிவாசல் இல்லை. இங்கு ஜுமுஆ மற்றும் மற்ற தொழுகைக்கு மக்கள் வருவார்கள். ஏனெனில் அதுவே பள்ளிவாசல் கட்டுவதன் குறிக்கோளாகும்.

இங்கு ஒவ்வொரு பகுதியிலும் பள்ளிவாசல்களைக் கட்டும் வாய்ப்பினை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! அதன் மூலம் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய விருப்பத்தையும் வழிகாட்டுதலையும் நிறைவேற்றியவாறு இஸ்லாம் மற்றும் ஜமாஅத்தின் அறிமுகத்திற்கு ஓர் ஊடகமாக நமது பள்ளிவாசல்களை விளங்கச் செய்வானாக! தப்லீகின் புதிய களங்கள் திறக்கட்டுமாக! உலகிற்கு இஸ்லாத்தின் உண்மையான போதனை தெரிய வரட்டுமாக! ஏனெனில் இக்காலத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத் தான் உண்மையான இஸ்லாத்தை உலகிற்கு வழங்க முடியும்.

பிறகு நமக்கு பள்ளிவாசல்களைக் கட்டுவது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருப்பதற்கு இன்னொரு காரணம், ஒரு அறிவிப்பில் வருகிறது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்; இன்னும் சொல்வதாயின் கட்டளையிட்டார்கள்:

உங்கள் வட்டாரங்களில், வீடுகள் உள்ள பகுதிகளில், உங்கள் கோத்திரத்தாரிடம் மஸ்ஜிதுகளை உருவாக்குங்கள் என்று கட்டளையிட்டார்கள்.

அக்காலத்தில், கோத்திரங்களின் வடிவில்தான் சுற்று வட்டாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இன்றும் கூட சில பகுதிகளைக் பாருங்கள். சில சமுதாயங்கள் பிற நாடுகளுக்குச் செல்லும் போது தாம் அனைவரும் ஓரிடத்தில் சேர்ந்து வாழ்வதை விரும்புகின்றனர். சீனர்கள் எங்கு சென்றாலும் சீனா டவுணை உருவாக்கின்றனர். எவ்வாறிருப்பினும், இந்த அறிவிப்பில் ஒவ்வொரு வட்டாரத்திலும் பள்ளிவாசலை உருவாக்குமாறு கூறப்பட்டுள்ளது. பிறகு அதனை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்திருங்கள் என்று கட்டளையிடப்பட்டுள்ளது. திருக்குர்ஆனிலும் பல இடங்களில் மஸ்ஜிதுகளைக் கட்டுமாறு கட்டளை உள்ளது. எனவே பள்ளிவாசல்களுக்கு பெரும் முக்கியத்துவம் உள்ளது. குறிப்பாக அஹ்மதி முஸ்லிம்கள் என்று அழைக்கப்படுகின்ற நமக்கு இது மிகவும் முக்கியமானதாகும். அதன் மூலம் நாம் நமது கூட்டு வழிபாடுகளுக்கு

ஒரு தூய்மையான சுத்தமான பகுதியை ஏற்பாடு செய்கிறோம். அதுவும் இஸ்லாத்தைப் பற்றி எண்ணற்ற தப்பெண்ணங்கள் பரவி வருகிற இக்காலச் சூழ்நிலையில் இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகில் எடுத்து வைப்பதற்கு இது தேவைப்படுகிறது.

எனவே இந்த சௌத்தால் (Southall) மற்றும் ஹௌன்ஸ்லோ (Hounslow) பகுதியில் ஜமாஅத் ஒரு மஸ்ஜிதை கட்டியுள்ளது. இன்ஷா அல்லாஹ் அடுத்த வாரம் அதன் திறப்பு விழா நடைபெறும். இந்தக் குத்பா நிகழ்த்தப்படுகிற இந்தப் பள்ளிவாசலின் கட்டடம் இதற்கு முன் மஸ்ஜிதுடைய நோக்கத்துடன் குறிப்பாகக் கட்டப்படவில்லை. மாறாக அலுவலகங்கள் இருந்த கட்டிடம் தான் தற்போது மஸ்ஜித் ஆக மாற்றப்பட்டு விட்டது. அதுபோன்று ஹேய்ஸ் (Hayes) பகுதியிலும் சமுதாயக் கூடம் ஒன்று மஸ்ஜித் ஆக மாற்றப்பட்டு விட்டது. நான் கூறியது போன்று பல்வேறு அலுவலகங்கள் மாற்றி அமைக்கப்பட்டு மஸ்ஜித் ஆக்கப்பட்டுள்ளன. எனவே அல்லாஹ் இந்த மஸ்ஜிதை இஸ்லாமிய போதனைகளைப் பரப்புவதற்கு ஒரு வழியாக ஆக்குவானாக! நமது ஈமானின் முன்னேற்றத்திற்குக் காரணமாக்குவானாக! ஈமானது முன்னேற்றம்தான் குறிப்பாக ஒவ்வொரு மஸ்ஜிதுடனும் தொடர்புடையது. நான் ஓதிய வசனத்தில் அல்லாஹ் பள்ளிவாசல்களின் முக்கியத்துவத்தைக் கூறுகிறான். மஸ்ஜிதின் முக்கியத்துவம் மற்றும் அதன் குறிக்கோள்களைப் பற்றி கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அதனைப் பற்றி திருக்குர்ஆனில் வேறொரு இடத்தில் இவ்வாறு கூறுகிறான்:**

மஸ்ஜித் என்பது முழுக்க முழுக்க அல்லாஹ்விற்கே உரியதாகும். இங்கு வருபவர் கலப்பற்ற முறையில் அடியானாக தம்மை ஆக்கியவாறு வர வேண்டும். பள்ளிவாசல்களில் ஒருபோதும் மறுப்பு, இணைவைப்பு, ஏன் உலகியல் பேச்சு கூட கூடாது. எனவேதான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் உலகத் தொழில் சம்பந்தமான பேச்சுகளையும், காணாமற்போன பொருள்களுக்கான அறிவிப்பையும் பள்ளிவாசல்களில் செய்வதைத் தடுத்துள்ளார்கள். ஆம். இன்னும் சில காரியங்களைச் செய்வதற்கு அனுமதி உள்ளது. அது இறைவனை இபாதத் செய்த பிறகு இறைவனின் தூதுச் செய்தியை உலகில் பரப்பும் திட்டமிடுதல், இறைவனை அருகில் கொண்டு வர திட்டமிடுதல், அதனை செயல்படுத்த தம்மை ஆயத்தப்படுத்துதல், அல்லாஹ்வின் படைப்பினங்களில் முன்னேற்றத்திற்கான வழிவகைகளை செய்வதற்காக ஆலோசனை செய்தல், அதற்காக தம்மை அர்ப்பணித்தல் ஆகியவற்றை மஸ்ஜிதில் செய்ய அனுமதி உண்டு. இவ்விஷயங்கள் நான் ஓதிய வசனத்தில் தெளிவுபடுத்தப்பட்டது.

நமது பள்ளிவாசல்கள் எல்லாருக்காகவும் திறந்துள்ளது என்று நாம் பொதுவாக கூறுகிறோம்; உலகிற்கு எடுத்துச் சொல்கிறோம். அதன் பொருள், பொதுவாக நமது பள்ளிவாசல்களில் இதை வெளிப்படக் காணலாம். ஒருவர் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும் அல்லது மதமற்றவராக இருப்பினும் இங்கு வரலாம்; வரவும் செய்கின்றனர். நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. ஆனால் அல்லாஹ்வின் இந்தக் கட்டளையை நாம் எப்போதும் கவனத்தில் கொள்ள வேண்டும். பள்ளிவாசல்கள் அல்லாஹ்வை இபாதத் செய்வதற்கேயாகும். நாம் மற்ற மதத்தினருக்கு அனுமதி வழங்கினாலும் கலப்பற்ற முறையில் இறைவனுக்கே இபாதத் செய்வதில் பங்கு பெறும் அளவில் மட்டுமே ஆகும். ஏனெனில் ஒவ்வொரு மதத்திலும் ஒரு இறைவனின் வடிவமைப்பு உள்ளது. ஒரே இறைவனின் வணக்கம் உங்கள் மதத்தில் இருக்கும் எனில், அப்பகுதியை நீங்கள் எமது பள்ளியில் வைத்து செய்யலாம். சிலைகளின் வணக்கம் மற்றும் இணை வைப்பின் பங்குள்ள வணக்கவழிபாடுகளைப் பள்ளிக்கு வெளியில் சென்று செய்து கொள்ளுங்கள். எனவே இந்த நிபந்தனையுடன் எந்த மதத்தைச் சார்ந்தவராக இருப்பினும் பள்ளியில் வந்து இபாதத் செய்யலாம். மஸ்ஜித் என்பது எத்தகைய இடமெனில் அதில் ஒருபோதும் இணை வைத்தலுக்கு அனுமதியில்லை.

நிச்சயமாக பள்ளிவாசல்கள் அல்லாஹ்வுக்கே உரியன. அது கட்டப்படுவதன் நோக்கமே ஒரே இறைவனை வணங்க ஒன்றுகூடுவது தான். அது இறைவனின் வீடாகும். இறைவன் கட்டளையிட்டுள்ளான். எனது வீட்டிற்கு வணங்குவதற்காக வந்தால் அங்கு என்னை மட்டுமே வணங்குங்கள். எனது கட்டளைகளின்படி

அமல் செய்யுங்கள். இதற்கு முந்தைய வசனத்திலும் இதே கருத்தே செல்கிறது. இறைவனின் இருப்பே ஒரு தனித்த இருப்பாகும். அவனிடமிருந்து விலகிச் செல்பவர் அவர் செய்ததற்கு தண்டனையைப் பெறுவார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது தோற்றத்திற்குப் பிறகு இவ்விஷயம் இன்னும் ஒளிமயமாகி விட்டது. எனது ஏகத்துவத்தை இப்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக நிலைநாட்டுவேன் என்று அல்லாஹ் ஒரு முடிவு செய்தான். பள்ளிவாசல்கள் இந்த நோக்கத்தை நிறைவேற்றும் ஓர் ஊடகமாகும். இப்போது உலகில் ஏகத்துவம் மற்றும் உண்மை ஆகியவை மஸ்ஜித்துகள் மூலமே பரவும்.

எனவே, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொண்டதாக வாதிக்கின்ற நாம் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வந்த அவர்களின் உண்மையான அடியாருடைய ஜமாஅத்தில் இணைந்திருப்பதாக வாதிக்கிறோம். நமது பணி இதுவேயாகும். இதுவே நமது நோக்கமாகவும் இருக்க வேண்டும். நாம் கலப்பற்ற முறையில் இறைவனை வணங்குவதற்காக பள்ளிவாசலுக்கு வர வேண்டும். அதனால் நமது இபாதத்தின் தரம், இறைவனோடு உயிருள்ள தொடர்பு ஆகிய தகுதிகள் வளர வேண்டும். அதே வேளையில் அந்த சத்தியத்தின் ஒளி உலகில் பரவுவதற்கும் காரணமாக அமைய வேண்டும். எனவே உண்மையின் ஒளியை உலகில் பரப்ப வேண்டும் எனில் நாம் வெளிப்படையான இபாதத் செய்வதற்காக வாதித்தால் போதாது. மாறாக அந்த ஒளியில் உங்களை வெளிச்சமாக்க வேண்டும்.

நான் ஓதிய இரண்டாவது வசனமாகிய சூரா அல் அஃராஃபின் வசனத்தில் வருவதாவது, முதலில் நீதியை கடைபிடிக்குமாறு கட்டளையிடப்பட்டது.

நீர் கூறுவீராக: எனது ரப் நீதியுடன் நடக்குமாறு கட்டளையிட்டுள்ளான். இந்தக் கட்டளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தரப்பட்டுள்ள அதே வேளையில் ஒவ்வொரு மூஃமினுக்கும் பொருந்தும். அவர் மீது ஈமான் கொண்டதாக வாதிக்கின்ற மூஃமினுக்குப் பொருந்தும். இங்கு முதலில், நாங்கள் நீதியை நிலைநாட்டுபவர்கள்; உரிமைகளை வழங்குபவர்கள்; தக்வாவின் படி நடப்பவர்கள் என்றவோர் அறிவிப்பு செய்யுமாறு கட்டளையிடப்பட்டுள்ளது.

எவரது நிலை இவ்வாறு இருக்குமோ அவரே தமது எல்லா கவனத்தையும் அவன் பக்கமே திருப்பி இபாதத்தின் கடமையை நிறைவேற்றுகின்றார். எனவே உள்ளங்களை தூய்மையாக்கியவர்களே இபாதத்தின் கடமையையும் நிறைவேற்றுகின்றனர். இயல்பில் நன்மை, தூய்மை, நீதி இல்லாதவர்கள் அடியாருக்குரிய கடமையையும் நிறைவேற்ற மாட்டார்கள்; அல்லாஹ்வுக்குரிய கடமையையும் நிறைவேற்றமாட்டார்கள். ஒரு விஷயத்தில் நன்மை மற்றும் நீதியைக் கடைபிடித்தால் இன்னொரு விஷயத்தில் நீதி, நேர்மை காணப்படுவதில்லை. எனவே தக்வாவே நீதியை நிலைநாட்டச் செய்கிறது. தக்வாவே அல்லாஹ்வை நோக்கி முழுமையாக திரும்பச் செய்கிறது. தக்வாவே இபாதத்தின் உரிமையை நிறைவேற்றச் செய்கிறது.

அல்லாஹ் கூறுகிறான்: தொழுகையின் வேளையில் மஸ்ஜிதை நோக்கித் திரும்புங்கள். மனித இயல்பினால் உலகியல் மற்றும் சுய லாபம் உங்கள் கவனத்தை வேறு பக்கம் ஈர்த்தாலும் கூட தொழுகைக்கான அழைப்பு வந்த உடனேயே அல்லாஹ்வின் கட்டளையின் பக்கம் திரும்பி உங்களை அல்லாஹ்வின் உண்மையான அடியாராக்க வேண்டும். அதுவன்றி இந்த இபாதத்துகள் பயனற்றவையாகும். இங்கு பள்ளிவாசலுக்கு வருவதும் பயனற்றதாகும். எனவே மார்க்கத்தைக் கலப்பற்றதாக்கி இறைவனை அழைக்கும் கட்டளை உள்ளது. இபாதத்தின் உயர் தகுதியைப் பெறுவதற்கும் கூட இறை கட்டளையைப் பேணுவது நிபந்தனையாக்கப்பட்டுள்ளது. இறை கட்டளைகளின்படி அமல் செய்ய வேண்டும். அல்லாஹ்வின் மீது பயம் மற்றும் தக்வாவே இறை அடியார்களுக்குரிய கடமையையும் நிறைவேற்ற வைக்கிறது. இவையனைத்தும் சேர்ந்து தான் ஒரு மனிதனை இறைவனை இபாதத் செய்பவனாக ஆக்குகின்றன.

பிறகு அல்லாஹ் கூறுகிறான்: எவ்வாறு உங்களை முதன்முறையாக படைத்தானோ அவ்வாறே மரணத்திற்குப் பிறகும் நீங்கள் அவனிடம் திரும்புவீர்கள். மனிதன் நினைவில் கொள்ள வேண்டும். உலகில் செய்யப்பட்ட அமல்கள் மறு உலகின் நற்கூலி அல்லது தண்டனைக்குக் காரணமாக அமைகின்றன. எனவே

அல்லாஹ் கூறுகிறான்: உங்கள் பௌதீகப் பிறப்பு அதில் நீங்கள் கடந்து செல்லும் பல கட்டங்கள் மற்றும் இந்த வாழ்க்கையைக் கழிப்பது உங்களுக்கு ஓர் உணர்வை உருவாக்க வேண்டும். அதாவது மரணத்திற்குப் பிறகு இதுபோன்று பல கட்டங்கள் உள்ளன. அதனை நமது ரூஹ் கடந்து செல்ல வேண்டியதுள்ளது.

எனவே மறுமை வாழ்வு, நமது ரூஹ் –ன் சிறந்த பரிணாம வளர்ச்சிக்காக நீங்கள் இவ்வுலகின் உங்கள் செயல்களைக் குறித்து சிந்தியுங்கள். இறைவனுக்குரிய கடமையை சரியாக நிறைவேற்றும்போது தான் உங்கள் சிந்தனை, கவலை உண்மையான வடிவில் அமைய முடியும்.

உங்கள் மறைவான நிலைமைகளையும் கலப்பற்றதாக அல்லாஹ்வுக்கே இபாதத் செய்வதாக ஆக்கும்போது தான், அவனது கட்டளைகளின்படி முழுமையாக அமல் செய்ய முயற்சி செய்யும் போதுதான் உணமையான வடிவில் அமைய முடியம். இபாதத்தின் நேரம் மனதில் இருக்க வேண்டும். நாம் இறைவன்முன் நிற்க வேண்டும். பிறகு கலப்பற்ற முறையில் கவனத்தை அவன் பக்கம் திருப்பி, இபாதத்துதான் இவ்வுலகில் என்னை இறைவனது அருளுக்கு வாரிசாக ஆக்கும். மறுவுலகிலும் வாரிசாக ஆக்கும் என்று மனதில் கொள்ள வேண்டும். பிறகு இபாதத் கலப்பற்றதாக இருக்க வேண்டும். இதனைப் பற்றி குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஒரு கேள்வி கேட்டவருக்கு பதிலளித்தார்கள். தொழுகையில் கம்பீரமிக்க அல்லாஹ்வின் முன் எவ்வாறு நம்மை எடுத்து வைக்க வேண்டும் என்று அவர் கேட்டார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த கேள்விக்கு பதிலளித்தார்கள்.

பெரிய விஷயங்கள், திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளன. கலப்பற்ற முறையில் இறைவனை நினைவு கூற வேண்டும். அவனது பேருபகாரங்களை மிகவும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். அல்லாஹ்வுடைய எண்ணற்ற அருள்கள் மனிதன் மீது உள்ளன. குறிப்பாக இங்கு வாழ்பவர்கள் மீது உள்ளன. இவர்களுக்கு மார்க்க சுதந்திரம் உள்ளது. உலகியல் விஷயத்திலும் இறைவனுடைய பெரும் அருளும் கருணையும் உள்ளது.

கூறுகின்றார்கள்: அவனது பேருபகாரங்களை மிகவும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். கலப்பற்ற நிலை வேண்டும். நன்மையின் நிலை வேண்டும். இபாதத்தின் விதிமுறைகளின் சுருக்கம் இதுவேயாகும். இறைவனைப் பார்ப்பது போன்று அவன் முன் நிற்க வேண்டும் அல்லது இறைவன் தம்மைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற உணர்வுடன் நிற்க வேண்டும். எல்லா வகையிலும் கலப்படம் மற்றும் இணைவைப்புகளையும் விட்டு தூய்மையாக வேண்டும். அவனது மகத்துவம் அவனது ருபூபிய்யத் (படைத்துக் காத்தோம்புதல்) என்ற பண்பு மீது கவனம் செலுத்த வேண்டும். குறிப்பிடப்பட்ட துஆக்கள் மற்றும் பிற துஆக்களை ஓத வேண்டும். அதிகமாக தவ்பா, இஸ்திக்ஃபார் செய்ய வேண்டும். மீண்டும் மீண்டும் தனது பலவீனத்தை எடுத்து வைக்க வேண்டும். அதன் மூலம் நஃப்ஸ் தூய்மையாவதற்காகவும், இறைவனுடன் உண்மையான தொடர்பு ஏற்படுவதற்காகவும், அவனது அன்பில் மூழ்கிவிடுவதற்காகவும் அதனை செய்ய வேண்டும். இந்த நிலையை ஒரு மூஃமின் தன்னிடம் உருவாக்க முயற்சி செய்ய வேண்டும். மஸ்ஜித் இந்த நிலையை உருவாக்கவும் இதனை நினைபுவடுத்துவதற்கும் மிகச்சிறந்த வழியாகும். எனவே நாம் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். மஸ்ஜித் கட்டியதால் நமது பொறுப்பு இன்னும் அதிகமாகியுள்ளது. நாம் இங்கு இபாபதத்தின் கடமையை நிறைவேற்ற வேண்டும். அதே வேளையில் இறைவனது பிற கட்டளைகளின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். முன்பை விட அதிகமாக கவனம் செலுத்த வேண்டும். அதுவன்றி நாம், முக்லிஸீன லஹுத்தீன் – மார்க்கத்தைக் கலப்பற்றதாக்குங்கள் என்பதன்படி அமல் செய்ய இயலாது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இக்காலத்தில் காட்டுதல், தன்னையே புகழ்தல், பெருமை, அகம்பாவம், கர்வம் போன்ற கீழ்தர பண்புகள் அதிகமாகி விட்டன. முக்லிஸீன லஹுத்தீன் என்ற பண்புகள் இருந்தன. அவை வானத்திற்கு எழுந்து போய்விட்டன. இறைவனிடம் பொறுப்பு சாட்டுதல், இறைவனை சார்ந்து நிற்றல் ஆகியவை இல்லாதது போன்று ஆகிவிட்டன அதாவது உலகையே சார்ந்து நிற்றல், தமது பெருமை பேசுதல் அதிகமாகி விட்டது. அல்லாஹ்வின் மீது தவக்குல் வைப்பது குறைந்து விட்டது. உலக கடவுள்களின் பக்கம் கவனம் அதிகமாக உள்ளது.

அல்லாஹ்வின் ரூபூபிய்யத்தின் பக்கம் கவனம் குறைந்து விட்டது. இபாதத்தின் கடமை கூட நிறைவேற்றப்படுவதில்லை. அல்லாஹ் ஒப்படைத்துள்ள பணிகள், கட்டளையிடப்பட்ட நன்மைகளின் பக்கம் கவனம் முற்றிலுமாக இல்லை.

கூறுகின்றார்கள்: அத்தகைய மக்கள் பிறகு முக்லிஸீன லஹுத்தீன் ஆக எவ்வாறு ஆக முடியும்? எவ்வாறு அந்தக் கடமையை நிறைவேற்ற முடியும்? மேலும் அன்னார் கூறுகின்றார்கள். இப்போது இறைவனது விருப்பம் அந்த நற்செயல்களின் விதை தூவப்பட வேண்டும். இறைவனது விருப்பம் எவ்வாறு நிறைவேறும். இறைவன் இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அனுப்பி தனது இந்த விருப்பத்தின்படி செயலாடை அணிவித்தான. எனவே நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இருப்பதாக வாதிக்கின்றோம். நாம் உலகாதாய செயல்களிலிருந்து விலகிக் கலப்பற்றவர்களாக வேண்டும். நான் ஏற்கனவே முன்னரும் கூறினேன். அப்போது தான் மஸ்ஜிதை உருவாக்கும் நமது நோக்கம் நிறைவேறும். இபாதத்துடன் தமது அமல்களை சரியாக்குவதன் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். எவர் இதனை செய்வாரோ அவரே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் செய்த பைஅத்தின் கடமையை நிறைவேற்றியவர் ஆவார்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய வார்த்தைகளாவது, இப்போது இறைவனது விருப்பம் அந்த நன்மைகளின் விதை தூவப்பட வேண்டும். இது எனது வார்த்தையல்ல. மாறாக இயல்பில் இந்தப் புரட்சி இந்த விதை தூவப்பட்டதால் உருவாகி உள்ளது. இன்றிலிருந்து 123 ஆண்டுகளுக்கு முன்பு இந்த விதை தூவப்பட்டது. அது இலட்சக்கணக்கான இபாதுஸ் ஸாலிஹீன்களை உருவாக்கியது. இபாதுஸ் ஸாலிஹீன் என்ற பழங்களை வழங்கியது. அல்லாஹ்வுடைய இந்த நடைமுறை இன்றும் தொடர்கிறது. புதிய மக்கள் இன்னும் ஜமாஅத்தில் இணைகின்றனர். அவர்கள் இந்த சிந்தனையுடன் தான் இணைகின்றனர். எவ்வாறு அல்லாஹ்வுடன் தொடர்பு ஏற்படுத்துவது? உயிருள்ள தொடர்பு ஏற்படுத்துவது? எவ்வாறு இபாதத்துகளின் தகுதியை உயர்த்துவதற்கு முயற்சி செய்வது? அடியான் இறைவனது திருப்தியைப் பெறத்தக்க உயர் தரத்தை எவ்வாறு பெறுவது? என்ற சிந்தனை அம்மக்களிடம் உருவாகியுள்ளது. இப்போது நீங்கள் என் முன் அமர்ந்துள்ளீர்கள். இங்கிருக்கிற பெரும்பாலான அஹ்மதிகளின் தந்தையர், பாட்டனார்களுமே அஹ்மதிகளாவர். அவர்கள் இறைவனது விருப்பத்தை நிறைவேற்றியிருந்தனர். பின்னர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் வந்தனர். அல்லாஹ்வுக்குரிய உரிமையையும் அடியாருக்குள்ள உரிமையையும் நிலைநாட்டினர். அந்த பெரியவர்களின் இபாதத்துகளின் இன்னும் அதிகமான பழத்தை விளைவிப்பது அடுத்த தலைமுறையின் கடமையாகும். அவர்கள் அல்லாஹ்வுடன் உண்மையான தொடர்பை நிலைநாட்டினால் மட்டும் போதாது. அதிகரிக்கவும் வேண்டும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய ஜமாஅத்தை மற்றவரிடமிருந்து பிரித்துக் காட்டும். அதுவன்றி வெளிப்படையான தொழுகை, வெளிப்படையான நோன்பு, வெளிப்படையான குர்ஆன் ஓதுதல் ஆகியவற்றை மிக அதிகமாக மற்றவர்களும்தான் செய்கின்றனர். நமக்கும் மற்றவருக்கும் வித்தியாசம், நமது ஒவ்வொரு செயலும் இறைவனுக்காகவே ஆகிவிடும்போது தான் வெளிப்படும். நாம் உலகியல் விஷயங்களிலும் கூட இறைவனது திருப்தியின் அம்சத்தை தேடும் போது தான் நமது எல்லா கவனமும் பள்ளிவாசலுக்குச் சென்று இபாதத் செய்யும் போது இறைவன் பக்கமே இருக்கும். மார்க்கத்தை அவனுக்காக கலப்பற்றதாக்கியவாறு அவனையே அழைப்போம். தொழுகைகளில் நமது கவனம், நமது தொழில்களில் மீது இருக்காது. ஒருவர் மற்றவரை உலகியல் பழிவாங்கல் செய்வதன் பக்கம் இருக்காது. மாறாக எல்லா விவகாரங்களையும் இறைவன் பக்கம் விட்டு விட்டு அவன் பக்கம் குனிவோம். அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக அல்லாஹ்வின் கட்டளைகளின் பக்கம் அமல் செய்பவர்களாக நாம் இருப்போமாக!

இறைவன் திருக்குர்ஆனில் கட்டளையிட்டவற்றை அமல் செய்பவர்களாவோமாக. நன்மையில் முன்னேறுவோமாக. தக்வாவில் முன்னேறுபவர்களாவோமாக. பாவம் வரம்பு மீறல்களிலிருந்து தப்பிப்போமாக. அதற்கு எதிராக ஜிஹாத் செய்பவர்களாவோமாக. வெறுமனே தப்பித்தால் மட்டும் போதாது.

அதற்கு எதிராக ஜிஹாத் செய்யவும் வேண்டும். அல்லாஹ் திருக்குர்ஆனில் ஓரிடத்தில் சூரா மாயிதாவில் கூறுகிறான்.

உங்களை எந்த சமுதாயத்தின் மீதுள்ள பகைமையும் அவர்கள் உங்களை மஸ்ஜிதே ஹராமில் இருந்து தடுத்து வைத்தால் அவர்கள் மீது வரம்பு மீறுமாறு தூண்ட வேண்டாம். நன்மை மற்றும் தக்வாவில் ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். பாவம், வரம்பு மீறுதலில் ஒருவர் மற்றவருக்கு ஒத்துழைக்க வேண்டாம். அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். அவன் தண்டனை வழங்குவதில் கடுமையானவன். இன்று இஸ்லாம் பற்றி ஆட்சேபனை செய்யப்படுகிறது. அது கடுமையை விரும்புகிறது. யுத்தத்தை விரும்புகிறது என்று கூறப்படுகிறது. இஸ்லாம் நவூதுபில்லாஹ் அதிகாரத்தாலும், வாளினாலும் பரப்பப்பட்டதாகக் கூறப்படுகிறது. இஸ்லாத்திற்கு எதிராக உள்ள எல்லா மார்க்கத்திற்கு எதிராகவும் வாளெடுத்தது என்று கூறப்படுகின்றது. அல்லாஹ் இந்த வசனத்தில் இந்த ஆட்சேபனையையும் மறுத்துள்ளான். இறைவனது கலப்பற்ற அடியார்கள் இறைவனது திருப்தியை வேண்டுபவர்கள், இறைவனுக்காககே இபாதத் செய்பவர்கள் எதிரிகளிடம் எவ்வகையிலும் வரம்புமீறக் கூடாது. அவர்கள் வரம்பு மீறினாலும் கூட பதிலுக்கு வரம்பு மீறக்கூடாது.

எனவே முஸ்லிம் – உண்மையான மூஃமின் இறைவனது திருப்தியை வேண்டுகிறார். நன்மை மற்றும் தக்வாவின் விஷயத்தில் தமக்கும் பிறருக்கும் எப்போதும் முழுமையாக ஒத்துழைக்க தயாராக இருக்கின்றார். பாவம் மற்றும் வரம்பு மீறலில் அதிருப்தி அடைகின்றனர். அப்படிப்பட்ட விஷயங்களில் அவர்களால் ஒத்துழைப்பு தர முடியாது. அது தக்வாவுக்கு மாற்றமானதாகும். அது அவர்களது இபாதத்துகளை வீணாக்குவதற்குச் சமமாகும். நன்மையான காரியங்களிலும் தடையை ஏற்படுத்துகின்ற வரம்பு மீறலுக்கு ஒத்துழைப்பு தருகின்ற, தக்வா இல்லாத தொழுகைகள் வெறும் காட்டுதலான தொழுகைகளேயாகும். அந்த தொழுகைகள், இபாதத்துகள் இறைவனின் பார்வையில் எந்த அந்தஸ்த்தையும் பெறுவதில்லை. அத்தகைய தொழுகையாளிகளைப் பற்றி இறைவன் கூறுகின்றான்: அத்தகைய தொழுகையாளிகளுக்கு கேடு தான். நாம் காலத்தின் இமாமை ஏற்று, இஸ்லாத்துடைய கட்டளைகளின்படி நடப்பதாக நாம் செய்துள்ள நமது உடன்படிக்கையை புதுப்பித்துள்ளோம். மஸ்ஜிதுக்கு இபாதத் செய்வதற்காக வந்து விட்டு மஸ்ஜித் கட்டப்பட்ட நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக வந்து விட்டு பிறகு பாவங்களிலும் வரம்பு மீறலிலும் கலந்து விடுவோம் என்று நம்மைப் பற்றி எதிர்பார்க்கவே முடியாது. எனவே இங்கு வாழுகின்றவர்களின் ஐயங்களையும் இப்பகுதியில் வாழ்கின்ற நாமே அகற்ற வேண்டும். மஸ்ஜித் கட்டப்பட்டதுடன் இங்கு தப்லீகிற்கான வழி திறக்கிறது. அத்துடன் எதிர்ப்பும் கூட தீவிரமாகிறது. முஸ்லிம்களின் தரப்பிலிருந்து எதிர்ப்பு வரக் காரணம் அவர்களின் உலமாக்கள் சார்பாக அஹ்மதிய்யத்தைப் பற்றிய தவறான தோற்றம் எடுத்து வைக்கப்படுகிறது. நவூதுபில்லாஹ். அஹ்மதிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய நபித்துவத்தின் காதமிய்யத்தை மறுப்பவர்களாவர் என்று கூறப்படுகிறது. அதனை பறிப்பவர்கள் என்று கூறப்படுகிறது. அஹ்மதிகள் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய காத்தமுன்னபிய்யீன் என்ற அந்தஸ்த்தின் மீது எல்லாரையும் விட அதிகமாக உறுதிகொண்டவர்கள் என்று எப்போதும் அறிவித்துக் கொண்டே இருக்கின்றனர். அது பற்றிய புரிதலையே அன்னாரது உண்மைப் பேரன்பர்தான் நமக்கு தந்துள்ளார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் தந்துள்ளார்கள். எவ்வாறிருப்பினும் எதிரிகளின் எதிர்ப்பை சந்திக்க வேண்டி வருகிறது. அதுபோன்று உள்ளூரிலுள்ள முஸ்லிம் அல்லாத மக்கள் இஸ்லாத்தைப் பற்றி தமது உள்ளத்தில் கொண்டுள்ள தப்பெண்ணத்தின் காரணமாக நம்மீது வரம்பு மீறல் செய்கின்றனர். அதுபோன்று அன்னிய நாட்டினர் அன்னிய சமுதாயத்தையே எதிர்க்கின்றவர்கள் உள்ளனர். அவர்கள் தரப்பிலிருந்தும் வரம்பு மீறுதல் செய்யப்படுகிறது. இவ்வாறு நாம் எல்லாபுறமிருந்தம் வரம்பு மீறலுக்கு இலக்காகி உள்ளோம். இதன் விளைவாக நேற்று முன் தினம் இரவில் இந்தப் பள்ளியின் சுவற்றில் தவறான வார்த்தைகள் எழுதப்பட்டன. சில பொருள்களை வீசி அசுத்தப்படுத்த முயற்சி செய்யப்பட்டுள்ளது. இது உள்ளத்தில் பதிக்கப்பட்டுள்ள பகைமையின் விளைவாகும். அல்லது இஸ்லாத்திற்கு எதிரான முஸ்லிம் அல்லாதவர்களின் செயலாக இருக்கலாம். நாம் இந்த ஒவ்வொரு வகை மக்களின் சந்தேகங்களையும் களைய வேண்டியுள்ளது. அது நமது இபாதத் கலப்பற்றதாக அல்லாஹ்விற்காகவே ஆகும்போது நடக்கும். அப்போது நாம் மஸ்ஜிது கட்டியதன்

நோக்கத்தை நிறைவேற்றியவர்களும் ஆவோம். அதுபோன்று நாம் இன்னொரு விஷயத்தையும் நினைவில் கொள்ள வேண்டும். ஜமாஅத்தின் அழகு அதில் தான் உள்ளது. ஒருவருக்கொருவர் ஒருவர் மற்றவரை விட அதிக தக்வாவையும் நன்மையும் பெற்றிருக்க வேண்டும். பார்க்கின்ற ஒவ்வொருவரும் இவர்களுக்கிடையில் சகோதரத்துவம் அன்பு காணப்படுவது இந்த ஜமாஅத்தின் சிறப்பம்சம் என்று கூற வேண்டும். ஜமாஅத் தொழுகைக்கு வருமாறு கட்டளையிடப்பட்டதன் நோக்கம் இதுவும் ஆகும். அதில் ஜமாஅத்தின் தோற்றம் தென்படும். எல்லாரும் சேர்ந்து ஓர் இருப்பாகி விட வேண்டும். பரஸ்பரம் அன்பு அதிகரிக்க வேண்டும். மனத்தாங்கல் அகல வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு போதனை செய்தவாறு ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:**

இவ்வாறு நம்மிடம் பழக்கம் ஏற்பட வேண்டும். பலவீனமான சகோதரர்களுக்கு உதவி செய்ய வேண்டும். அவர்களுக்கு சக்தியை வழங்க வேண்டும். இரு சகோதரர்களாக இருந்து கொண்டு ஒருவருக்கு நீந்தத் தெரியும். மற்றவருக்கு நீந்தத் தெரியாது எனில் முதலாமவர் மற்றவரை மூழ்குவதிலிருந்து காப்பாற்ற வேண்டாமா? அவரை மூழ்கவிட்டு விடலாமா? இது எந்த அளவுக்கு பொருத்தமற்ற செயல்? அவரை மூழ்குவதிலிருந்து காப்பாற்றுவது அந்த சகோதரரின் கடமையாகும். எனவே திருக்குர்ஆனில் வருகிறது. சகோதரரின் சுமையை எடுங்கள். செயல்ரீதியான, நம்பிக்கை ரீதியிலான பொருளாதார ரீதியிலான பலவீனங்களில் அவருடன் உதவிக்கு வாருங்கள். உடல் பலவீனங்களுக்கும் சிகிச்சை கொடுங்கள். பலவீனமானவருக்கு, ஆற்றல் உள்ளவர் உதவாதவரை ஒரு ஜமாஅத், ஜமாஅத் ஆக இருக்காது. அதற்கு ஒரே நிலை அதனை மறைப்பது தான். சஹாபாக்களுக்கு இதே போதனை தான் தரப்பட்டது. புதிய முஸ்லிம்களின் பலவீனத்தை பறைசாற்றாதீர்கள். நீங்களும் கூட பலவீனமாகவே இருந்தீர்கள். பெரியவர் சிறியருக்கு தொண்டு செய்வதும் அவசியமாகும். நேசத்துடன் அவர்களைப் பராமரிக்க வேண்டும்.

மேலும் கூறுகின்றார்கள்: பாருங்கள். ஒருவர் மற்றவரை தின்றால் அந்த ஜமாஅத் ஒரு ஜமாஅத் ஆக இருக்காது. நான்கு பேர் சேர்ந்து அமர்ந்து தமது ஏழை சகோதரரை குறை கூறிக் கொண்டு இருப்பது, ஏழைகளை இழிவுபடுத்துவது, அவர்களை இழிவாகவும் வெறுப்புடனும் பார்ப்பது ஆகியவை ஒருபோதும் கூடாது. ஒன்றுபட்டு வலுவுடன் இருக்க வேண்டும். ஒருமைப்பாடு உருவாக வேண்டும். அதனால் நேசம் வருகிறது. பரக்கத்துகள் உருவாகின்றன. நல்லொழுக்க சக்திகளை ஏன் பரந்ததாக ஆக்கப்படுவதில்லை? அனுதாபம், அன்பு, மன்னித்தல், கருணை காட்டுதல் ஆகியவற்றை சகஜமாக்குங்கள். எல்லா பழக்கங்களையும் விட கருணை, குறைகளை மறைத்தல் ஆகியவற்றிற்கு முன்னுரிமை வழங்குங்கள். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் கடுமையாக குற்றம் பிடிக்கக் கூடாது. இதனால் உள்ளத்தில் வருத்தமும் மனத்தாங்கலும் உருவாகிறது. சிலர் சிலரின் மீது அனுதாபம் காட்டும் போது ஜமாஅத், ஜமாஅத்தாக ஆகிறது. குறைகளை திரையிட வேண்டும். இந்நிலை ஏற்படும் போது ஒருவர் மற்றவரது உறுப்புகளாக ஆகி விட முடியும்.

சஹாபாக்களும் இதே வழிமுறையைத்தான் மேற்கொள்ளுமாறு இறைவன் நினைவூட்டினான். தங்கத்தால் ஆன மலைகளை செலவழித்திருந்தாலும் இந்த சகோதரத்துவம் அவர்களுக்கு கிடைத்திருக்காது. அது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மூலமாக அவர்களுக்கு கிடைத்தது. இவ்வாறு இறைவன் இந்த இயக்கத்தை உருவாக்கியுள்ளான். அதுபோன்ற சகோதரத்துவத்தைத் தான் உருவாக்குவான். எனவே புரட்சியை உருவாக்கவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வந்தார்கள். தக்வாவை உலகில் மீண்டும் நிலைநாட்டவும், அல்லாஹ்வுக்குரிய கடமையையும் அடியாருக்குரிய கடமையையும் நிறைவேற்றக் கூடிய ரஹ்மானின் நல்லடியார்களின் கூட்டம் உருவாகவுமே தோன்றினார்கள்.

எனவே நமது மகிழ்ச்சி பள்ளிவாசலைக் கட்டுவதில் மட்டுமல்ல. மாறாக மஸ்ஜிதை கட்டுவதுடன் முக்லிஸீன லஹுத்தீன் படி அமல் செய்தவாறு உண்மையான அடியாராவதில் உள்ளது. இந்த உலகாதாய காலத்தில் எல்லா இடத்திலும் உலகாதாயம் பெறுவதற்காக உலகத்தைப் பெறுவதற்காக ஒரு பந்தயமே

நடைபெறுகிறது. இந்தத் தகுதிகளைப் பெறுவதோ நிச்சயமாக இறைவனது அருள்களை ஈர்ப்பவராக ஆக்குகிறது. இன்று அல்லாஹ்வின் அருளால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகின் மூலை முடுக்குகள் வரை சென்று சேர்கிறது. அங்கு முஸ்லிம் அல்லாதவரும் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு ரஹ்மானின் அடியார் ஆகின்றனர். அங்கு முஸ்லிம்களும் கூட பித்அத்திலிருந்து விலகி உண்மையான இஸ்லாத்தை புரிந்து கொண்டிருக்கின்றனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் இணைகின்றனர். நான் ஆரம்பத்திலேயே கூறினேன். உண்மையான இஸ்லாத்தை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தான் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய பிரதிநிதித்துவத்துடன் உலகில் எடுத்து வைக்கிறார்கள். நேற்று முன் தினம் நான் ஒரு கடிதத்தைப் பார்த்தேன். ஓர் அஹ்மதி உடையது. அதில் அல்லாஹ் எவ்வாறு அவரது நிலையை மாற்றினான் என்று தெரிய வருகிறது. அல்லாஹ்வின் அருள், நல்லியல்பு கொண்டவர்களை எவ்வாறு ஜமாஅத்தின் அங்கமாக மாற்றிக் கொண்டிருக்கிறது என்று காட்டுகிறது. எவ்வாறு பித்அத்துகளிலிருந்து தூய்மையாக்குகிறது என்று காட்டுகிறது.

அந்தக் கடிதத்தின் மொழியாக்கம் இதுவாகும்: நாங்கள் வாழ்கின்ற இவ்வாழ்க்கையில் சில விஷயங்கள் குறித்து முற்றிலும் அறியாதவர்களாக இருந்துள்ளோம். இன்று வரை மனிதன் அந்த வார்த்தைகளை ஒருபோதும் கேட்டதில்லை. உதாரணமாக இறந்தவர்கள் மீது குர்ஆன் ஓதுதலில் ஈடுபட்டிருந்தோம். இது அவர் தமது பித்அத்துகளை குறிப்பிடுகிறார். ஈஸா (அலை) அவர்களை இறந்தவர்கள் என்று ஒப்புக் கொள்ளுதல் போன்றவற்றையும் பற்றி கூறும்போது நான் மிகவும் நிதானமாக அந்த நூல்களைப் படித்தேன் என்கிறார். அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய புத்தகங்களை படித்தார். அவரது மொழியில் ஒரு சில ஜமாஅத் நூல்கள் தயாராகி உள்ளன. அவர் கூறுகிறார்: நான் படிக்கப் படிக்க எனது உள்ளத்தில் ஓர் ஒளி நுழைந்து எனக்கு ஆற்றல் வழங்கிக் கொண்டே சென்றது. அல்ஹம்துலில்லாஹ். இந்தப் புத்தகங்கள் படித்த பிறகு நான் நீண்ட காலமாக இறைவனின் வழியை விட்டு தூர விலகிப் போயிருந்துள்ளோம் என்ற உணர்வு ஏற்பட்டது. இப்போது நான் தங்களிடம் துஆவுக்காக விண்ணப்பிக்கிறேன். ஜமாஅத்திலிருந்து கிடைக்கப் பெற்ற அந்த ஒளி எனது முழு உலகையும் ஒளிமயமாக்கட்டும். அல்லாஹ்வுக்கு நன்றி. நான் முந்தைய பித்அத்துகளில் இருந்து விலகி விட்டேன். அல்ஹம்துலில்லாஹ். பிறகு தனது ஊரைப் பற்றி கூறுகிறார்.

எமது ஊரில் வந்து தெருக்களில் நடந்தால் அதே பித்அத்துகளில் மூழ்கிய மக்களைப் பார்க்கலாம். புதிதாக வருபவர்கள் எவ்வாறு விலகி வருகிறார்கள். குறிப்பாக நாம் மகிழ்ச்சி அடைய வேண்டும். நான் ஏற்கனவே கூறினேன். பெரியவர்களின் சந்ததிகள் தம் உள்ளிலிருந்து பித்அத்துகளை அகற்றுங்கள். சடங்கு சம்பிரதாயங்களை அகற்றுங்கள். காலத்தின் வேகம் உங்களை அடித்துச் சென்று விட வேண்டாம். பிறகு புதிதாக வருபவர்கள் முந்தி விடுபவர்களாக உறுதியாகி விடும்.

எழுதுகிறார்: ஆர்டிகோஃப் என்ற பெயருடைய குடும்பத்தைச் சேர்ந்தவரான ரஸுல் யான் என்பவர் எழுதுகிறார். எங்கள் குடும்பத்தினர் அனைவரும் மஸீஹ் மவ்வூது வந்து விட்டார்கள் என்று ஈமான் கொள்கிறோம். எங்களை சாட்சி சொல்பவர்களில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதே எமது விருப்பம். அத்துடன் நாங்கள் உங்களிடம் இன்னொரு துஆவுக்கான விண்ணப்பமும் செய்கிறோம்.

அல்லாஹ் எமது வருங்கால சந்ததிகளில் இஸ்லாமிய உலமாக்களையும் முஸ்லிம் மருத்துவர்களையும் உருவாக்க வேண்டும். அங்கு டாக்டர்கள் குறைவாக இருக்கலாம். உலமாக்கள் தான் இருக்கிறார்களே! உலமா பெயர் தாங்கிகள். அவர் உண்மையான உலமாக்களை உருவாக்குவதற்காக துஆ விண்ணப்பம் செய்கிறார். அவர்கள் உண்மையான இபாதுர் ரஹ்மான் ஆக இருக்க வேண்டும். அவர்கள் அல்லாஹ்வின் கட்டளையின் படி செல்பவர்களாக இருக்க வேண்டும். இபாதத்தின் உரிமையை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். அங்குள்ள முபல்லிக் சாஹிப் அவர்களைப் பற்றி அறிமுகமாக இவ்வாறு எழுதுகிறார்:

இம்மனிதர் முதலில் அஹ்மதிய்யத்தின் கடுமையான எதிரியாக இருந்தார். இவரது மகன் முதலில் அஹ்மதியானார். இவர் மகனை எதிர்த்து வந்தார். இன்னும் சொல்வதாயின் மிரட்டி வந்தார். உம்மை வீட்டை விட்டு வெளியேற்றி விடுவேன் என்றார். ஆனால் 2008ன் கிலாஃபத் ஜுப்ளி ஜல்ஸாவில் கலந்து கொண்டார். அப்போதும் இதே நிலையில் இருந்தார். ஜல்ஸாவின் போது ஏற்பட்ட தாக்கத்தால் பைஅத் செய்தார்.

எழுதுகிறார்: இவர் எந்த அளவுக்கு இப்போது முன்னேறி விட்டார் எனில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலமாக ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் மீது பேரன்பு உருவாகி விட்டது. அஹ்மதிய்யத்திற்கு முன் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கடுமையான வெறுப்பு தமக்கு இருந்ததாக கூறுகிறார். இப்போது அவரது நிலை செய்யதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் தம்மை அர்ப்பணித்தவராகி விட்டார். ஆரம்பத்தில் இவருக்கு ஜமாஅத் நூல்கள் தரப்பட்ட போது கடும் ஆட்சேபனை செய்து வந்தார். இப்போது நிலை என்னவென்றால், இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம் என்ற நூல் அவர் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டது. முதன் முறை படித்த போது எனக்கு புரிந்தது. இரண்டாவது முறை படித்த போது இன்னும் சில விஷயங்கள் புரிந்தன. இப்போது மூன்றாவது முறை படிக்கிறேன். இதுவே புதிதாக வருபவர்களின் ஈமானிய நிலையாகும். அல்லாஹ்வின் அருளால் முன்னேறிக் கொண்டே இருக்கின்றனர். இவரும் ரஷ்யாவிலுள்ள ஒரு பிரதேசத்தைச் சேர்ந்தவரே. அல்லாஹ், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய இல்ஹாம் இங்கும் நிறைவேறுவதை பார்க்கச் செய்வானாக. மணல் துகள் அளவு அஹ்மதிகள் இங்கு நிறையும் காட்சியை பார்ப்போமாக.

எனவே இக்காலத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் உண்மையான இஸ்லாம் உலகிற்கு தெரிய வருகிறது. இப்பகுதியில் நமது மஸ்ஜித் இல்லை. மேலும் தப்லீக் கூட பகிரங்கமாக செய்ய அனுமதியில்லை. அஹ்மதிய்யத்தை சரியாக அறிமுகமும் செய்ய முடியவில்லை. ஆனால் அல்லாஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய துஆவை ஒப்புக் கொண்டவாறு கவனத்தை இங்கு திருப்பியுள்ளான். மக்கள் தாமே இங்கு திரும்புகின்றனர். அஹ்மதிய்யத்தின் வெற்றியும் இன்ஷா அல்லாஹ் துஆவினால்தான் நடக்க உள்ளது. நாம் உலகில் மேற்கத்திய நாட்டில் இருக்கிறோம். இங்கு மார்க்க சுதந்திரம் உள்ளது. இபாதத் செய்ய எந்தத் தடையும் இல்லை. இதுபோன்ற நாடுகளில் வசிப்பவர்களுக்காகவும் துஆ செய்ய வேண்டும். ரஷ்யாவைப் பற்றி குறிப்பிட்டேன்.

இன்னும் சில முஸ்லிம் நாடுகளிலும் தப்லீகிற்கு அனுமதி இல்லை. அல்லாஹ் இந்தத் தடைகளையும் கட்டுப்பாடுகளையும் அகற்றுவானாக. அவர்களும் சுதந்திரமாக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது ஜமாஅத்தில் இணையட்டும். மஸ்ஜிதுகளை உருவாக்குபவர்களாகட்டும். இந்த நாடுகளிலுள்ள மார்க்கச் சுதந்திரம் பற்றி குறிப்பிட்டேன். அவ்வாறிருந்தும் இங்குள்ள சட்டம் கவுன்சிலருக்கும் அண்டை அயலாருக்கும் ஒரு சுதந்திரம் தந்துள்ளது. அவர்கள் நினைத்தால் எந்தவொரு சட்டத்தின் கட்டுமானத்தையும் தடை செய்யச் செய்து விடலாம். இங்கும் கூட மஸ்ஜிதுடைய கட்டுமானப் பணிக்காக கவுன்சிலரிடமிருந்து முதலில் அனுமதி கிடைத்த பிறகு சில தடைகள் போடப்பட்டன. அதனால் மஸ்ஜிது கட்டட வேலையும் தாமதமானது. அனுமதி மறுக்கப்பட்டது. பிறகு அல்லாஹ் இங்குள்ள அஹ்மதிகளின் துஆவைக் கேட்டான். வழக்கு போடப்பட்டது. நீதிமன்றம் நமக்கு சாதகமாக தீர்ப்பளித்தது மட்டுமின்றி வழக்கிற்கான எல்லா செலவையும் கூட கவுன்சிலிடம் காட்டி விட்டது. இவ்வாறு இங்குள்ள அஹ்மதிகளுக்கு நீதிமன்றத்திற்கு நன்றி செலுத்த வேண்டும். அல்லாஹ்வுக்கும் இந்த அருளுக்காக நன்றி செலுத்த வேண்டும். நாம் அல்லாஹ்வுக்கு முன் இன்னும் அதிகம் குனிய வேண்டும். அல்லாஹ்வின் உண்மையான அடியாராகி இந்த மஸ்ஜிதின் கடமையை நிறைவேற்ற வேண்டும். அதற்காக நன்றி செலுத்தும் பொருட்டு ஐவேளையும் இங்கு மக்கள் தொழ வர வேண்டும்.

**ஒரு ஹதீஸில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்:**

மலக்குகள் உங்கள் ஒவ்வொருவருக்காகவும் துஆ செய்கின்றனர். நீங்கள் உங்கள் தொழும் இடத்தில் அமர்ந்திருக்கும் வரை மலக்குகள் கூறுகின்றனர். பிறகு அந்த இடத்தில் மலக்குகள் தொழுகின்றனர்.

அல்லாஹ்வே இவரை மன்னித்து விடுவாயாக. அல்லாஹ்வே இவர் மீது கருணை காட்டுவாயாக. மலக்குகளின் துஆவைப் பெற்ற இம்மக்கள் எவ்வளவு நற்பேறு பெற்றவர்கள். பிறகு இந்த துஆவுடன் அம்மக்களின் துஆவும் சேர்ந்து அல்லாஹ்வின் அருளை ஈர்த்து வருகிறது. அல்லாஹ்வின் மன்னிப்பும் கருணையும் கிடைத்து விட்டால் அவருக்கு வேறு என்ன வேண்டும்? அல்லாஹ் நம்மை அல்லாஹ்வின் மன்னிப்பைப் பெற்றவர்களுடன் இணைப்பானாக.

கடைசியில் இந்தப் பள்ளியின் கட்டுமானம் குறித்து சில தகவல்கள் தரப்பட்டுள்ளன. அதனை சிறிது கூறுகிறேன். சில தகவல்களை ஆரம்பத்தில் கூறினேன். எவ்வாறு பள்ளி உருவானது? அங்கிருந்த கட்டடம் மாற்றப்பட்டது? என்று குறிப்பிட்டேன். அதனை வாங்கவும் கட்டவும் கிட்டத்தட்ட 9 இலட்சம் பவுண்ட் செலவாகியுள்ளது. அல்லாஹ்வின் அருளால் ஹௌன்ஸ்லோவிலுள்ள இரு ஜமாஅத்துகள் செலவினங்களை ஏற்றுக்கொண்டன என்று கூறப்பட்டது. மண்டலத்தில் மற்ற மக்களும் தந்திருக்கலாம் என்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இரண்டு ஜமாஅத்தை மட்டுமே கணக்கில் எடுத்தால் 200 சந்தாதாரர்கள் ஆகின்றனர். மொத்த மண்டலத்தையும் சேர்த்தால் எண்ணிக்கை 400 ஆகும். இவர்கள் தான் இந்த செலவை ஏற்றனர். இருந்தாலும் இந்த தொகை அதிகமேயாகும். இந்நிலையில் ஜமாஅத் பெரும் தியாகம் செய்துள்ளது. அல்லாஹ் இவர்களின் தியாகங்களை ஏற்றுக் கொள்வானாக. குறிப்பாக 6 பேர் பெரும் தியாகம் செய்துள்ளனர். இவர்கள் 2 இலட்சத்து 80 ஆயிரம் பவுண்ட் வரை தியாகம் செய்துள்ளனர். ஒருவரே ஒரு இலட்சத்தை விட அதிகமாக தந்துள்ளனர். மற்றவர்கள் 20 ஆயிரத்திலிருந்து 50 ஆயிரம் பவுண்ட் வரை தந்துள்ளனர். அல்லாஹ் இவர்கள் அனைவரின் பொருளிலும் உயிரிலும் பரக்கத்தை தருவானாக.

கடைசியில் நினைவூட்டலாக மீண்டும் கூறுகிறேன். மஸ்ஜிதுடைய கடமை கட்டுவதிலோ, 10-20 ஆயிரங்கள் அல்லது இலட்சங்களின் தியாகங்களால் மட்டும் நிறைவேறாது. அசல் நோக்கம் அதனை நிரப்புவதில் உள்ளது. அவர்களும் அல்லாஹ்வுக்காக கலப்பற்றவர்களாக வந்து பள்ளி நிரப்புபவர்களாக இருக்க வேண்டும். கலப்பற்ற மனதுடன் அல்லாஹ்வுக்கு இபாதத் செய்பவர்களாக இருக்க வேண்டும். மஸ்ஜிதுக்கு வெளியில் சென்றாலும் அந்த தாக்கத்தால் இறை அடியார்களின் கடமையை நிறைவேற்றுபவர்களாக இருக்க வேண்டும். நன்மை மற்றும் தக்வாவில் முன்னேறுபவர்களாக ஆக வேண்டும். இதுவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்ததன் ஹக்கை நம்மை நிறைவேற்றுபவர்களாக ஆக்கும். அல்லாஹ் நமக்கு அதற்கான வாய்ப்பளிப்பானாக.

ஒரு துஆவுக்கும் சொல்ல விரும்புகிறேன். பாகிஸ்தானில் அன்றாடம் நடக்கின்ற நிகழ்ச்சி தான். இந்தியாவில் கூட ஐதராபாத் தெற்கில் நமது பள்ளியின் மீது எதிரிகளுக்கு ஒரு கண் உள்ளது. அதனை அபகரிக்க முயற்சி செய்கிறார்கள். ஏனெனில் அங்கு முஸ்லிம்கள் கணிசமாக உள்ளனர். எனவே அவர்களின் அழுத்தத்தால் அரசும் கூட அவர்களின் தாக்கத்தின் கீழ் வந்து கொண்டிருக்கிறது. அல்லாஹ் இவர்களின் விஷமத்திலிருந்து நம்மை காப்பானாக.

★ ★ ★ ★ ★


**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL WAHID MOSQUE, LONDON**

**ON 24.02.2012**

Translated by : Muallim M. NIZAMUDEEN

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456